## April 26, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. ஈரானுடன் கச்சா எண்ணெய் வர்த்தகத்தில் ஈடுபட்ட சீன எண்ணெய் சுத்திகரிப்பு நிறுவனம், சுமார் 40 கப்பல் போக்குவரத்து நிறுவனங்கள் மற்றும் சரக்குக் கப்பல்களுக்கு அமெரிக்கா பொருளாதாரத் தடை விதித்துள்ளது. இது தொடர்பாக அமெரிக்க நிதியமைச்சகம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:

(i) ஈரானின் கச்சா எண்ணெய் விற்பனை நீடித்து நிலைத்து வருவதில், சீனாவில் சுதந்திரமாக இயங்கும் எண்ணெய் சுத்திகரிப்பு நிறுவனங்கள் தொடர்ந்து முக்கியப் பங்காற்றி வருகின்றன.

(ii) இதில் சீனாவின் லியாவ்னிங் மாகாணம் டாலியன் நகரில் உள்ள ஹெங்லி பெட்ரோகெமிக்கல் சுத்திகரிப்பு நிறுவனம், ஈரானிடம் கச்சா எண்ணெய் மற்றும் பிற பெட்ரோலியப் பொருள்களை பெருமளவு வாங்கும் நிறுவனமாக உள்ளது. எனவே, அந்த நிறுவனத்துக்கு அமெரிக்கா பொருளாதாரத் தடை விதித்துள்ளது.

(iii) சீனாவில் சுதந்திரமாக இயங்கும் இரண்டாவது பெரிய எண்ணெய் சுத்திகரிப்பு நிறுவனமாக உள்ள ஹெங்லி பெட்ரோகெமிக்கல் (டாலியன்) சுத்திகரிப்பு நிறுவனம், கடந்த 2023-ஆம் ஆண்டு முதல் தடை விதிக்கப்பட்ட கப்பல்கள் மூலம் 50 லட்சம் பீப்பாய்களுக்கும் அதிகமாக ஈரான் கச்சா எண்ணெய்யை வாங்கியுள்ளது.

(iv) மேலும் ஈரான் சார்பாக மறை முகமாக இயங்கும் எண்ணெய் கப்பல்களின் அங்கமாக செயல்படும் சுமார் 40 கப்பல் போக்குவரத்து நிறுவனங்கள் மற்றும் கப்பல்களுக்கும் பொருளாதாரத் தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்தக் கப்பல்கள் ஈரானில் இருந்து பிற நாடுகளுக்குக் கொண்டு சேர்க்கும் கச்சா எண்ணெய், திரவமாக்கப்பட்ட பெட்ரோலியம் எரிவாயு (எல்பிஜி), பெட்ரோலியம் மற்றும் பெட்ரோகெமிக்கல் பொருள்கள், ஈரானின் நிலையற்ற ஆட்சிக்கு நிதியுதவி கிடைக்கவழி வகை செய்கிறது.

(v) ஈரானின் நிதி திரட்டலுக்குத் தடை:

- மத்திய கிழக்குப் பிராந்தியம் முழுவதும் ஆபத்தான விளைவுகள் குறித்து எண்ணிப்பார்க்காமல் ஈரான் மேற்கொள்ளும் நடவடிக்கைகள், அமெரிக்க நலன்களுக்கு எதிரான அச்சுறுத்தல் ஆகியவற்றுக்கு நிதிதிரட்டும் ஈரானின் ஆற்றலுக்கு இத்தகைய பொருளாதார அழுத்தம் தொடர்ந்து தடையை ஏற்படுத்தி வருகிறது.
- இதுகுறித்து அமெரிக்க நிதிய மைச்சர் ஸ்காட் பெசன்ட் கூறுகையில், அமெரிக்கா விதித்துள்ள பொருளாதாரத் தடைகள், ஈரான் ஆட்சிக்கு நிதி நெருக்கடியை ஏற்படுத்தி, மத்திய கிழக்குப் பிராந்தியத்தில் அந்நாடு வலிந்து தாக்குதல் நடத்துவதைத் தடுக்கும். அத்துடன் இது அணு ஆயுதம் தயாரிக்க வேண்டும் என்ற அந்நாட்டின் குறிக்கோளையும் தடுத்து நிறுத்தும்' என்று தெரிவித்தார்.
- இந்த நடவடிக்கை மூலம், தற்போது தடை விதிக்கப்பட்டுள்ள நிறுவனங்களுக்குச் சொந்தமாக அமெரிக்காவில் உள்ள சொத்துகள் அல்லது அமெரிக்கர்களின் கட்டுப்பாட்டில் உள்ள அந்தச் சொத்துகள் முடக்கப்படுகின்றன. இந்தத் தடைகளை மீறும் அமெரிக்க மற்றும் வெளிநாட்டு நபர்கள் மீது உரிமையியல் அல்லது குற்றவியல் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
- அமெரிக்கா தடை விதித்துள்ள சுமார் 40 நிறுவனங்கள் மற்றும் கப்பல்களில் சீனாவை மையமாக கொண்ட டோஃபா கப்பல் போக்குவரத்து நிறுவனம், அந்த நிறுவனத்துக்குச் சொந்தமான மார்ஷல் தீவுகளின் கொடி கொண்ட இடோர் கப்பலும் இடம்பெற்றுள்ளது.

- இந்தக் கப்பல்கள் ஈரான் கச்சா எண்ணெய் மட்டுமின்றி, அந்நாட்டின் எல்பிஜி, அதிக கந்தகம் கொண்ட எரிபொருள் எண்ணெய், எத்திலின் உள்ளிட்டவற்றை வெளிநாட்டு சந்தைகளுக்குக் கொண்டு சேர்த்துள்ளன.
- தற்போது அமெரிக்கா தடை விதித்துள்ள பல எண்ணெய் கப் பல்கள், சீனாவுக்குப் பெருமளவு ஈரான் கச்சா எண்ணெய்யை கொண்டு சேர்த்துள்ளன.

(vi) அடுத்த மாதம் அமெரிக்க அதிபர் டிரம்ப் சீனா சென்று, அந்நாட்டு அதிபர் ஷி ஜின்பிங்கை சந்திக்கத் திட்டமிட்டுள்ள நிலையில், சீனாவின் பெட்ரோகெமிக்கல் சுத்திகரிப்பு நிறுவனம், அந்நாட்டு கப்பல் போக்குவரத்து நிறுவனம் ஆகியவற்றுக்கு அமெரிக்கா பொருளாதாரத் தடை விதித்துள்ளது. ஈரானிடம் பெருமளவு கச்சா எண்ணெய் வாங்கும் நாடாக சீனா உள்ளது. அமெரிக்கா- இஸ்ரேல்-ஈரான் இடையே போர் தொடங்கும் முன், ஈரானில் இருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட கச்சா எண்ணெய்யில் சுமார் 80 முதல் 90 சதவீதத்தை சீனா வாங்கி வந்தது.

2. மத்திய அரசின் பொது கொள்கை சிந்தனைக் குழு வாகவும், பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கவும், கூட்டாட்சியை வளர்ப்பதற்குமான அமைப்பாகச் செயல்பட்டு வரும் ‘நீதி ஆயோக்' அமைப்பை மத்திய அரசு மறுசீரமைப்பு செய்துள்ளது.

(i) அதன்படி, நீதி ஆயோக் புதிய துணைத் தலைவராக அசோக் குமார் லாஹிரி நியமிக்கப்பட்டுள்ளார். மேலும், அதன் 5 முழு நேர உறுப்பினர்களாக பொருளாதார நிபுணர் கே.வி.ராஜு, எய்ம்ஸ் இயக்குநர் எம்.ஸ்ரீநிவாஸ், மத்திய அறிவியல் - தொழில்நுட்பத் துறை செயலர் அபய் கரந்திகர், விஞ்ஞானி கோவர்தன் தாஸ், மத்திய அமைச்சரவை முன்னாள் செயலர் ராஜீவ் கௌபா ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

(ii) இந்த அறிவிப்பை தனது எக்ஸ் பக்கத்தில் வெளியிட்ட பிரதமர் நரேந்திர மோடி, நீதி ஆயோகின் புதிய துணைத் தலைவர் மற்றும் 5 நிரந்தர உறுப்பினர்களுக்கு வாழ்த்து தெரிவித்தார். 'இந்தியாவின் கொள்கை உருவாக்கத்திலும், கூட்டுறவு கூட்டாட்சியை மேம்படுத்துவதிலும், வாழ்வை எளிமையாக்குவதை ஊக்குவித்து அதற்கான சீர்திருத்தங்களை முன்னெடுப்பதிலும் முக்கிய தூணாக நீதி ஆயோக் உருவெடுத்துள்ளது. இது பல்வேறு துறைகள் சார்ந்த புதிய கண்டுபிடிப்புகள், நீண்ட கால உத்திசார் சிந்தனைகளுகக்குமான தளமாகவும் நீதி ஆயோக் செயல்படுகிறது' என்றும் தனது பதிவில் பிரதமர் குறிப்பிட்டார்.

(iii) பிரதமர்தான் நீதி ஆயோக் அமைப்பின் தலைவர் ஆவார். இந்த அமைப்பின் துணைத் தலைவராக நியமிக்கப்பட்டதைத் தொடர்ந்து அசோக் குமார் லாஹிரி பிரதமர் நரேந்திர மோடியை மரியாதை நிமித்தமாக சந்தித்தார்.

(iv) மேற்கு வங்க பாஜக எம்எல்ஏ- வான அசோக் குமார் லாஹிரி, மத்திய அரசின் தலைமை பொருளாதார ஆலோசகராகப் பணியாற்றியவர். 15-ஆவது நிதி ஆணைய உறுப்பினராகவும் இருந்துள்ளார். மேற்கு வங்கத்தில் தற்போது நடை பெற்று வரும் சட்டப்பேரவைத் தேர்தலில் இவர் போட்டியிடவில்லை.

3. ஆம் ஆத்மியில் இருந்து விலகி, பாஜகவில் இணைந்த மாநிலங்களவை எம்.பி.க்கள் 7 பேரை தகுதி நீக்கம் செய்யக் கோரி அந்த அவையின் தலைவருக்குக் கடிதம் எழுதவுள்ளதாக ஆம் ஆத்மி கட்சியின் மூத்த தலைவரும், கட்சியின் மாநிலங்களவைக் குழு தலைவருமான சஞ்சய் சிங் தெரிவித்தார்.

(i) ஆம் ஆத்மி தலைமையுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக, அக்கட்சியில் இருந்து ராகவ் சத்தா, சந்தீப் பாடக், அசோக்மித்தல் உள்பட மாநிலங்களவை

உறுப்பினர்கள் 7 பேர் திடீரென விலகி பாஜகவில் இணைந்தனர். இது ஆம் ஆத்மி கட்சிக்கு பெரும் பின்னடைவாக கருதப்படுகிறது. இந்த எம்.பி.க்களில் ராகவ் சத்தா உள்பட 6 பேர், பஞ்சாபில் இருந்து தேர்வானவர்கள். ஸ்வாதி மாலிவால் தில்லியில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவர்.

(ii) 'அரசமைப்புச் சட்டத்துக்கு எதிரானது:

- தேசிய அரசியலில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளஇந்த விவகாரம் குறித்து ஆம் ஆத்மி கட்சியின் மூத்தத் தலைவர் சஞ்சய் சிங் சனிக்கிழமை கூறியதாவது:
- மாநிலங்களவை மற்றும் மக்களவையில் எந்த விதமான பிளவோ அல்லது பிரிவோ ஏற்படக்கூடாது என்று கட்சித் தாவல் தடைச் சட்டம் தெளிவாகக் குறிப்பிடுகிறது. அது மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையாக இருந்தாலும் கூட, அதற்கு எந்த சட்ட அங்கீகாரமும் இல்லை.
- கட்சித் தாவல் தடைச் சட்டமோ அல்லது அரசமைப்பின் 10-ஆவது அட்டவணையோ, மாநிலங்களவை அல்லது மக்களவையில் ஏற்படும் எந்த விதமான பிளவு, பிரிவு அல்லது குழுவை அங்கீகரிப்பதில்லை. மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை இருந்தாலும் கூட இந்த நிலைதான் இருக்கும்.

4. நீலகிரி வரையாடு ஒருங்கிணைந்த கணக்கெ டுப்பு பணிகள் வெள்ளிக்கிழமை (ஏப்.24) தொடங்கி ஏப்.27-ஆம் தேதி வரை நடைபெறுகிறது. இதுகுறித்து தமிழக வனத் துறை சார்பில் வெளியிடப்பட்ட செய்திக்குறிப்பு:

(i) தமிழகத்தின் மாநில விலங்கான நீலகிரி வரையாட்டின் நீண்ட காலப் பாதுகாப்பை உறுதிசெய்ய தமிழக அரசு சார்பில் பல்வேறு சிறப்பு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அதன் ஒரு பகுதியாக கேரள வனத் துறையுடன் இணைந்து ஒருங்கிணைந்த நீலகிரி வரையாடு கணக்கெடுப்பு பணி மேற்கொள்ளப்படுகிறது.

(ii) ஆண்டுதோறும் குளிர்கால கன்று ஈனும் பருவத்துக்கு பிறகு, முதிர்ந்த மந்தைகளுடன் இளம் விலங்குகளும் தென்படும்போது இந்த கணக்கெடுப்பு நடத்தப்படுகிறது. கடந்த 2024-ஆம் ஆண்டு நடைபெற்ற முதல் ஒருங்கிணைந்த கணக்கெடுப்பில் வரையாடுகளின் எண்ணிக்கை 1,031 என மதிப்பிடப்பட்டுள்ளது. தொடர்ந்து கடந்த ஆண்டு நடைபெற்ற இரண்டாவது ஒருங்கிணைந்த கணக்கெடுப்பில் நீலகிரி வரையாடுகள் எண்ணிக்கை 1,303 என மதிப்பிடப்பட்டது.

(iii) இந்த ஆய்வின் போது, பசுமலை போன்ற புதிதாக மீண்டும் குடியேறிய வாழ்விடங்களின் தொடர்ச்சியான பயன்பாட்டையும், ஒரு தசாப்தத்துக்கும் (10 ஆண்டுகள்) மேலாக காணப்படாத பகுதிகளுக்கு இந்த இனம் திரும்பியதும் உறுதிசெய்யப்பட்டது. இதில், ஆய்வு செய்யப்பட்ட பல நிலப்பரப்புகள் சங்க இலக்கியங்களில் விவரிக்கப்பட்டுள்ள இடங்களுடன் ஒத்துப் போகின்றன.

(iv) அதன் தொடர்ச்சியாக 3-ஆவது ஒருங்கிணைந்த கணக்கெடுப்பு பணிகள் கடந்த வெள்ளிக்கிழமை (ஏப்.24) தொடங்கியது. வருகிற ஏப்.27 வரை நடைபெறும் இப்பணி, 14 வனக்கோட்டங்கள், 43 வனச்சரகங்கள், 124 வனப்பிரிவுகள் மற்றும் 177 கணக்கெடுப்புத் தொகுதிகளை உள்ளடக்கிய, தமிழகம் முழுவதும் 3,100 கி.மீ.-க்கும் அதிகமான பரப்பளவில் நடைபெறுகிறது.

(v) கன்னியாகுமரியில் உள்ள அஷாம்புமொட்டை முதல் கூடலூரில் உள்ள தவளமலை வரை கணக்கெடுப்பு மேற்கொள்ளப்படுகிறது. பயிற்சி பெற்ற சுமார் 800 களப்பணியாளர்கள் இதில் பங்கேற்கின்றனர். மேலும், இத்திட்டத்தின் கீழ்

வரையாடுகளின் கழுத்தில் தடயம் அறியும் கழுத்து பட்டை பொருத்தும் பணியும் நடைபெறுகிறது. இந்தியாவில் நீலகிரி வரையாடுகளுக்கு இத்தகைய கண்காணிப்பு முறை செயல்படுத்தப்படுவது இதுவே முதல் முறை.

(vi) இத்தகைய ஒருங்கிணைக்கப்பட்ட கணக்கெடுப்புகள் மூலம் வாழ்விட மறுசீரமைப்பு, பாதுகாப்பு நடவடிக்கைகள் உள்ளிட்டவற்றை சுலபமாக மேற்கொள்ள முடியும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

5. பாலஸ்தீனத்தில் சுமார் 20 ஆண்டுகளுக்குப் பிறகு, காஸா பகுதியில் உள்ளாட்சித் தேர்தல் வாக்குப்பதிவு நடைபெற்றது.

(i) இஸ்ரேலுடனான போர் மற்றும் அரசியல் நெருக்கடிகளுக்கு மத்தியில், பாலஸ்தீனத்தின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் ஒரு முக்கிய மைல்கல்லாக இத்தேர்தல் பார்க்கப்படுகிறது. குறிப்பாக, 2006-க்குப் பிறகு காஸா மக்கள் முதல்முறையாகத் தங்களின் வாக்குகளைப் பதிவு செய்தனர்.

(ii) மேற்கு கரையைத் தளமாகக் கொண்ட பாலஸ்தீன ஆணையம் (பிஏ), ஹமாஸ் அமைப்பால் காஸாவிலிருந்து கடந்த 2007-இல் வெளியேற்றப்பட்டது.

(iii) அமெரிக்க மத்தியஸ்தத்தில் இஸ்ரேல்- ஹமாஸ் இடையே கடந்த ஆண்டு அக்டோபரில் ஏற்பட்ட சண்டை நிறுத்தத்துக்குப் பிறகு காஸாவின் டேய்ர் அல்- பாலா நகரில் இத்தேர்தலை நடத்துவதன் மூலம் அப்பிராந்தியத்தின் மீதான தனது அதிகாரத்தை நிலைநாட்ட ஆணையம் முயலுகிறது.

(iv) 20 ஆண்டுகள் கழித்து தேர்தல் நடை பெற்றாலும், பிற்பகல் வரை வாக்குப்பதிவு டேய்ர் அல்-பாலா பகுதியில் 13.8 சதவீதம், மேற்கு கரையில் 25.3 சதவீதம் என மந்தமாகவே காணப்பட்டது. மேற்கு கரையில் வாக்குப்பதிவு இரவு 7 மணி வரை நடைபெற்றது. காஸாவில் மின்சாரத் தட்டுப்பாடு காரணமாக ஒரு மணி நேரம் முன்னதாகவே வாக்குப்பதிவு நிறைவடைந்தது. இத்தேர்தலில் ஹமாஸ் அமைப்பு அதிகாரபூர்வமாகப் போட்டியிடவில்லை என்றாலும், அந்த அமைப்பின் ஆதரவு பெற்ற வேட்பாளர்கள் களத்தில் உள்ளதால், அவர்களின் வெற்றி வாய்ப்பு ஹமாஸின் செல்வாக்கை அளவிடும் கருவியாகக் கருதப்படுகிறது.

(v) நிதி நெருக்கடி, இஸ்ரேலின் முட்டுக் கட்டைகளுக்கு மத்தியிலும் இத்தேர்தல் நடத்தப்படுவது குறிப்பிடத்தக்கது. பாலஸ்தீனத்துக்குச் சேர வேண்டிய வரி வருவாயை இஸ்ரேல் நிறுத்திவைத்துள்ளதால், ஊழியர்களுக்கு ஊதியம் வழங்கக்கூட பாலஸ்தீன ஆணையம் திணறி வருகிறது.

(vi) இந்த உள்ளாட்சித் தேர்தல் வெற்றிகரமாக முடிந்தால், விரைவில் நாடாளுமன்ற மற்றும் அதிபர் தேர்தல்களை நடத்த வழிவகுக்கும் என்று உலக நாடுகள், பாலஸ்தீன மக்கள் பெரிதும் எதிர்பார்க்கின்றனர்.

6. இந்திய ஐடி பணியாளர்கள் உள்பட வெளிநாட்டினருக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் வகையில், அமெரிக்காவின் 'எச்-1பி' விசா திட்டத்தை 3 ஆண்டுகளுக்குத் தற்காலிகமாக நிறுத்திவைப்பதற்கான புதிய மசோதா அந்நாட்டு நாடாளுமன்றத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

(i) அமெரிக்க அதிபர் டிரம்ப்பின் குடியரசுக் கட்சியைச் சேர்ந்த அரிசோனா மாகாண எம்.பி.எலிகிரேன் இந்தமசோதாவைத் தாக்கல் செய்துள்ளார். இந்த மசோதாவில் முன் மொழியப்பட்டுள்ள கட்டுப்பாடுகள் வெளிநாட்டுப் பணியாளர்களுக்குக்

கவலையளிக்கும் வகையில் அமைந்துள்ளன.

(i) தற்போது ஆண்டுக்கு 65,000-ஆக உள்ள விசாக்களின் எண்ணிக்கையை வெறும் 25,000-ஆகக் குறைக்கவும்; எச்-1பி விசா பெறுவோருக்கான குறைந்தபட்ச ஆண்டு ஊதியம் 2 லட்சம் டாலராக (சுமார் ரூ.1.88 கோடி) இருக்க வேண்டும் என்ற நிபந்தனையும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

(ii) தற்போதைய குலுக்கல் முறைக்குமாற்றாக, அதிக ஊதியம் பெறுபவர்களுக்கு முன்னுரிமை அளிக்கும் முறையை அமல்படுத்த மசோதா கோருகிறது. ஏனெனில், அமெரிக்க நிறுவனங்கள் உள்நாட்டுப் பாளர்களைப் புறக்கணித்துவிட்டு, குறைந்த ஊதியத்தில் வெளி நாட்டினரைத் திணிப்பதாக மசோதாவை ஆதரிக்கும் உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

(iii) ஒரு குறிப்பிட்ட பணிக்கு வெளிநாட்டினரை அமர்த்தும் போது, அமெரிக்கர்களைப் பணிநீக்கம் செய்யக்கூடாது மற்றும் தகுதியான பணியாளர் உள்நாட்டில் கிடைக்கவில்லை என்பதை நிறுவனங்கள் உறுதிப்படுத்த வேண்டும். மிக முக்கியமாக, எச்-1பி விசா மூலம் அமெரிக்கா வருபவர்கள், நிரந்தர குடியுரிமை பெறுவதைத் தடுக்கும் கடுமையான விதிகளும் இதில் இடம் பெற்றுள்ளன. விசா வைத்திருப்பவர்கள் தங்களின் குடும்பத்தினரை அமெரிக்காவுக்கு அழைத்து வரவும் தடை விதிக்க இந்த மசோதா வழிவகை செய்கிறது.

7. 1968 மெக்ஸிகோ சிட்டி ஒலிம்பிக் போட்டியில் வெண்கலப் பதக்கம் வென்ற இந்திய ஹாக்கி அணியில் அங்கம் வகித்த குர்பாக் சிங் கிரெவால் (84) காலமானார்.

8. ஸ்கைரூட் விண்வெளி நிறுவனத்தால் விண்ணில் ஏவப்படவுள்ள 'விக்ரம்-1' எனும் இந்தியாவின் முதல் தனியார் ராக்கெட்டுக்கான வன்பொருள்களை ஏற்றிச் சென்ற லாரியை தெலங்கானா முதல்வர் ரேவந்த் ரெட்டி கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

(i) ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவன்விண் வெளிமையத்தில் இருந்து அடுத்த சில மாதங்களில் புவி வட்டப்பாதைக்கு விக்ரம்-1 ராக்கெட் செலுத்தப்படவுள்ள நிலையில், அதற்கான வன்பொருள்கள் தெலங்கானாவில் இருந்து அனுப்பிவைக்கப்பட்டன. இந்நிகழ்வை கொடியசைத்து ரேவந்த் தொடங்கிவைத்து ரெட்டி பேசியதாவது:

- ஹைதராபாதில் விக்ரம்-1 ராக்கெட் முழுவதுமாக வடிவமைக்கப்பட்டதை எண்ணி பெருமை கொள்கிறோம். ஏவுகணைகளை விண்வெளிக்குச் சுமந்து செல்வதற்கு ஏதுவாக இந்த ராக்கெட்டை ஸ்கைரூட் நிறுவனம் உருவாக்கியுள்ளது.
- கடந்த 2022-ஆம் ஆண்டில் தங்களது முதல் ராக்கெட்டை ஸ்கைரூட் நிறுவனம் உருவாக்கியது. மிகக் குறுகிய காலத்துக்குள் புவி வட்டப்பாதைக்கு ராக்கெட்டை செலுத்தும் அளவுக்கு அந்நிறுவனம் உயர்ந்திருப்பது மாபெரும் மைல்கல். ஏற்கெனவே போயிங், ஏர்பஸ் மற்றும் சஃப்ரான் ஆகிய நிறுவனங்கள் நமது மாநிலத்தில் உள்ளன.
- தற்போது இந்திய அளவில் விண்வெளித் துறையில் முதலிடத்தில் உள்ள நமது மாநிலத்தை சர்வதேச விண்வெளித் தொழில்நுட்பச் சந்தையாக 2047-க்குள் மாற்றுவதே இலக்கு.
- 2023-24 மற்றும் 2024-25 இடையே பொறியியல் துறை சார்ந்த பொருள்கள் ஏற்றுமதியில் தெலங்கானா 117.9 சதவீத வளர்ச்சியை பதிவுசெய்ததாக மத்திய அரசின் தரவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளன.
- இந்த வளர்ச்சிக்கு விமான உதிரி பாகங்கள் மற்றும் பாதுகாப்பு சாதனங்கள் பெரும்

பங்காற்றியுள்ளன.

- சர்வதேச பல்கலைக்கழகங்கள் மற்றும் தொழிற்துறை நிபுணர்களுடன் இணைந்து விண்வெளித் துறைக்கு அதிகளவிலான இளைஞர்களை தயார் செய்யும் விதமாக அவர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சிகளை வழங்க தெலங்கானா அரசு பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.
- வலுவான கொள்கைகள்,சிறந்த உள்கட்டமைப்பு, திறன் வாய்ந்த இளைஞர்கள் என ஸ்கைரூட் போன்ற நிறுவனங்களுக்கு ஆதரவளிக்க மாநில அரசு உறுதிபூண்டுள்ளது என்றார்.

9. உத்தர பிரதேசத்தில் ரூ.37,000 கோடி செலவில் கட்டமைக்கப்பட்ட கங்கை விரைவுச் சாலையை பிரதமர் நரேந்திர மோடி ஏப்.29-இல் திறந்துவைக்கவுள்ளார்.

(i) மீரட்- பிரயாக்ராஜ் இடையே 594 கி.மீ. தொலைவுக்கு அமைக்கப்பட்டுள்ள இந்த 6 வழிச் சாலை, மாநிலத்தின் மிக நீளமான விரைவுச் சாலை என்பதுடன் நாட்டின் மிகப் பெரிய உள்கட்டமைப்புத் திட்டங்களில் ஒன்று எனும் சிறப்புக்குரியதாகும்.

(ii) இது, மீரட், ஹாபூர், புலந்த்சாகர், அம்ரோஹா, ஷாஜகான்பூர், உன்னாவ், ரேபரேலி, பிரதாப்கர், பிரயாக்ராஜ் உள்பட 12 மாவட்டங்கள் வழியாக பயணிக்கிறது.

(iii) கடந்த 2021-இல் பிரதமர் மோடியால் அடிக்கல் நாட்டப்பட்ட இந்த மாபெரும் திட்டம், 4 பிரிவுகளாக பிரிக்கப்பட்டு, பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. மாநிலத்தின் மேற்கு தெற்கு பகுதிகளை இணைக்கும் கங்கை விரைவுச் சாலையால் பயண நேரம் குறைவதுடன், தொழிற்சாலைகளுக்கு இடையிலான போக்குவரத்து மேம்படும்; புதிய முதலீட்டு வாய்ப்புகளை உருவாக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(iv) ஷாஜகான்பூரில் இந்த விரைவுச் சாலையில் அவசர காலங்களில் விமானங்கள் தரையிறங்கும் வசதி கொண்ட 3.5 கி.மீ. தொலைவு ஓடுபாதையும் கட்டமைக்கப்பட்டுள்ளது. இத்தகைய சிறப்புக்குரிய கங்கை விரைவுச் சாலையை பிரதமர் மோடி ஏப்.29-ஆம் தேதி திறந்துவைக்க உள்ளதாக, மாநில அரசு வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

10. ஐ.நா. பொதுச் சபை தலைவர் - அன்னலெனா பேர்பாக்.

11. பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனத்தால் (டிஆர்டிஓ) தயாரிக்கப்பட்ட 30 மி.மீ. ஆளில்லா பீரங்கிகள் மற்றும் 7.62 மி.மீ. பிகேடி துப்பாக்கிகள் காட்சிப்படுத்தப்பட்டன.

(i) மகாராஷ்டிர மாநிலம் மும்பையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் இந்த இரு நவீன ஆயுத அமைப்புகளையும் பாதுகாப்புத் துறை செயலரும் டிஆர்டிஓவின் தலைவருமான சமீர் வி.காமத் அறிமுகப்படுத்தினார்.

(ii) இதுகுறித்து பாதுகாப்புத் துறை அமைச்சகம் வெளியிட்ட செய்திக்குறிப்பில், ‘இந்திய ராணுவத்தின் வலிமையை மேலும் அதிகரிக்கும் வகையில் 30 மி.மீ. ஆளில்லா பீரங்கிகள் மற்றும் 7.62 மி.மீ. பிகேடி துப்பாக்கிகள் உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்டுள்ளன.

(iii) 65 சதவீதம் வரை உள்நாட்டுப் பொருள்களால் இந்த ஆயுத அமைப்புகள் தயாரிக்கப்பட்டுள்ளன. எதிர்காலத்தில் இதை 90 சதவீதமாக உயர்த்த திட்டமிட்டுள்ளோம்.

(iv) அதி திறன் வாய்ந்த என்ஜினுடன் மிக விரைவாக தாக்குதல் நடத்தும் இந்த ஆயுதங்கள் பல்வேறு பணிகளை மேற்கொள்ளும் ஆற்றலுடையது.

(v) டாடா நிறுவனம் மற்றும் பாரத் ஃபோர்ஜ் உள்பட பல குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் பங்களிப்போடு இந்த ஆயுத அமைப்புகள் தயாரிக்கப்பட்டன' எனத் தெரிவிக்கப்பட்டது